# சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் இன்ப வாழ்வியல் கூறுகள்

**கோ.இசக்கிமுத்து, இளங்கலைத்தமிழ்**
**காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி.**

**20**

**ஆய்வு சுருக்கம்:-**

ஒரு நாட்டின் நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் அடையாளமாய் விளங்குவது அந்நாட்டின் இலக்கியங்களே ஆகும். எனவே தான் இலக்கியத்தை காலத்தின் கண்ணாடி என அழைக்கிறோம். சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரை பல இலக்கியங்கள் தோன்றியிருந்தாலும் அதில் காப்பியங்கள் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துள்ளன. காப்பியங்களில் சிலப்பதிகாரம் தொடங்கி இன்று வரை பல காப்பியங்கள் வெளிவந்துள்ளன. அதில் தற்கால சிறுகாப்பியமான சஞ்சீவி பர்வதத்தின் சாரலும் ஓர் அங்கமாய் இடம் பெற்றுள்ளது.

**"அறம் முதல் நான்கினுங் குறைபாடுடையது காப்பியமென்று கருதப்படுமே"**

என்ற தண்டியலங்கார நூற்பாவிற்கு ஏற்ப அறம் இன்பம் என்று இரண்டைக் கொண்டு சஞ்சீவி பர்வதத்தின் சாரல் படைக்கப்பட்டுள்ளது. அன்பான காதல் காவியம், மழைச்சாரல் எவ்வாறு இன்பத்தை அளிக்குமோ அதேபோல இச்சஞ்சீவி பர்வதத்தின் சாரலும் படிப்போர் மனத்திற்கு இன்பத்தை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

**முன்னுரை:-**

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் கூறும் நல்லுலகில் இலக்கண இலக்கியங்கள் மாற்றம் பெற்றன. மரபு நிலை திரியிற் பிறிது பிறிதாகும் என்ற கோட்பாட்டை அடியொற்றி ஒரு புதுமை காப்பியமாய் முடம் பட்டுக் கிடந்த மூட் சமுதாயத்தை மூரி நிமிர்த்த வந்த புரட்சிக் கவியின் புதுமைக் காப்பியம் சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் காதல் இன்பம் என்னும் தலைப்பில் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**காப்பிய இலக்கணம்:-**

**"அறமுத னுன்கினுங் குறைபாடுடையது காப்பிய மென்று கருதப்படுமே"**

அறம், பொருள், இன்பம் வீடன்று நான்கினுள் ஒன்றும் பலவுங் குறைந்து வருவது காப்பியமென்று கருதப்படுவது. **"காப்பியமெனினும், சிறு காப்பியமெனினும் ஒக்கும்"**

என்று தண்டியலங்கார ஆசிரியர் உரைக்கிறார்.

**பாவேந்தர்:-**

இருபதாம் நூற்றாண்டில் முண்டாசு கவிவேந்தரின் வழிவந்த பாவேந்தன்

**"தமிழ் உயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும் அறிவு உயரும் அறமும் ஓங்கும் இம்மலை போல் உயர்ந்த ஒரு நாடும் தன்மொழியில் தாழ்ந்தால் வீழும்"**

என்று கூறியவர். தமிழுக்காகவும், தமிழனத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்தவர். பாவேந்தர் தம் பாடல்களில் சொற் புதிது, பொருள் புதிது, சுவை புதிது என்று எல்லாம் புதிதாய் புதியதோர் உலகம் செய்தவர். சஞ்சீவி மலையில் ஒரு காதல் உலா வருகிறார்.

**இயற்கை எழில்:-**

நம் சங்கத் தமிழரின் காதல் என்பது இயற்கையோடு இயைந்த ஒன்று அதை பின்பற்றியே பாவேந்தனும் இயற்கை வசப்பட்டு இலக்கிய நயத்துடன் புதுமைக் காதல் பாடுகிறார்.

**“குயில் கூவிக் கொண்டிருக்கும், கோலம் மிகுந்த மயிலாடிக் கொண்டிருக்கும் , வாசம் உடையநற் காற்றும் குளிர்ந்தடிக்கும் கண்ணாடி போன்றநீர் ஊற்றுக்கள் உண்டு, கனிமரங்கள் மிக்க உண்டு பூக்கள் மணங்கமழும், பூக்கள் தோறும் சென்றுதே வீக்கள் இருந்தபடி இன்னிசை பாடிக் களிக்கும், வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு, காட்டு மறவர்களும் காதல் மணம் செய்வதுண்டு, நெஞ்சில் நிறுத்துங்கள், இந்த இடத்தைதான் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்று சொல்லிவடுவார்”**

இயற்கை எழிலுடன் சஞ்சீவி மலையின் அழகையும், சிறப்பையும் அமைப்பையும் பாடுகிறார்.

**சஞ்சீவி மலை – விளக்கம்:-**

சஞ்சீவி மலை மருத்துவ மலை என்றும் சஞ்சீவி என்பது ஒருவகை மருந்து செடி, இறந்தவரை பிழைக்கச் செய்யும் மூலிகையும் உள்ளது. அதன் பெயர் மிருத சஞ்சீவினி அல்லது மிருத சஞ்சீவி காரணி என்பதாகும்.

**காதல்:-**

காமப்பருவம் எய்திய நங்கையும், குமரப்பருவம் எய்திய நம்பிக்கும் இடையே நிகழும் உள்ளத்து உணர்ச்சியே காதல். கண்டதும் காதல் என்பது

**“கண் தரவந்த காம ஒள்ளெரி” (குறுந்தொகை 305)** என்று குறுந்தொகையும், அண்ணலும் நோக்கினாள், அவளும் நோக்கினாள் என்று இராமாயாணமும்,

**“கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்சொற்கள் என்ன பயனும் இல” (குறள் 1100)**

என்று உலகப் பொதுமறையும் உரைக்கிறது.

**தொல்காப்பியம்:-**

உலகில் வாழ்வியல் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் **“ஒன்றே வேறே என்றிரு பால்வயின் ஒன்றி உயர்ந்த பால தானையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப”**

உயர்ந்த பாலின் ஆணையால், நல்லூழின் ஏவலால் காதற் காட்சி நிகழும் என்பர் தொல்காப்பியர். மேலும்,

**“நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக் கூட்டி யுரைக்கும் குறிப்புரையாகும்” “ஒன்றுபட்ட உளக் குறிப்பைத் தலைவன் பார்வை தலைவிக்கும் அவள் பார்வை”**

அவனுக்கும் உரைக்கின்றன.

**சங்க இலக்கியத்தில் காதல்:-**

சங்கத் தமிழர்களின் காதல் இயற்கை எழிலோடு இயைந்த காதல். அறத்தொடு நின்ற காதல்,

உலகை வென்ற காதல் சங்கத் தலைவி ஒருத்தி தன் தலைவன் மாட்டு கொண்ட காதலின் மிகுதியால் தன் உள்ளத்து உணர்ச்சியை,

**"இம்மை மாறி மறுமை யாயினும் நீயா கிரென் கணவனை யானா கியர் நின்னெஞ்சுநேர் பவளே" (குறுந்தொகை** 40) என்கிறாள். ஒரு தலைவி, மற்றொரு கிழவி**,**

**"யாயும் யாயும் யாரா கியரோ எந்தையு நுந்தையு மெம் முறைக் கேளிர் யானும் நீயும் எவ்வழி அறிதும் செம்புலப் பெய்ந்நீர் போல அன்புடை நெஞ்சம்; தாம்கலந் தனவே" என்று பாடுகிறாள். பாவேந்தரோ, "அன்பும் உனக்குத்தான் ஆருயிரும் உன்னதுதான்,** என்று காதல் வயப்படுத்துகிறார்.

**காதல் வீரம்:-**

காதல் என்ற மூன்றெழுத்தில் வீரம் விளையும் என்ற கூற்றையும் பாவேந்தர் பாங்குற புலப்பத்துகிறார். சற்றே தலைவி இட்ட வேலை முடிக்க சற்று மலைப்பது போல் நின்றிட்டான். குப்பன் எனும் வேடக்குமரன், இளவஞ்சி சற்று நகைக்க முற்படும் போது கவனித்த குப்பன்,

**"பறந்தான் பருவதமேல் குப்பன் பாங்கினையும் தூக்கியே கிட்டரிய காதற் கிழத்தி இடும் வேலை விட்டெறிந்த கல்லைப் போல் காதலியர் காட்டிவிட்டால் மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்"** என்று பாவேந்தர் காதல் வீரத்தைச் சுவைபடக் கூறுகிறார்.

**ஊடலும், கூடலும்:-**

**"ஊடுதல் காமத்திற்கு இன்பம், அதற்கின்பம்**
**கூடி இயங்கப் பெறின்"**(குறள்1330)

என்று வள்ளுவர் சொல்வது போல் முதலில் ஊடல். சஞ்சீவி மலையில் உள்ள மூலிகை வேண்டும் என்கிறாள் இளவஞ்சி, குப்பனோ அதனால் விளையும் விளைவை உரைத்தான் அவளோ, எனக்கு ஆசை அதன் மேல் என்றாள் அதை கொடுத்ததால் எனக்கு என்ன தருவாய் என்றவனுக்கு,

**"முன்னே இலை கொடுத்தால் முத்தம் பிறகென்றாள் என் கிளியே நீ முத்தம் எத்தனை ஈவாய்? என்றான் என்றன் கரத்தால் இறுக உமைத் தழுவி நோகாமல் முத்தங்கள் நூறு கொடுப்பேன், என்றாள் ஆசையால் ஓர் முத்தம் அச்சாரம் போடென்றான்"**

அவள் கேட்டதைக் கொடுத்தான். பின் இன்பம் பெற்றான்.

**முடிவுரை:-**

புரட்சி கவிஞர் தன் சிறப்பை மேம்பட தன் உள்ளத்துணர்வுகளை எழுத்துக்களாய் பதிவு செய்ததன் பயனாய் விளைந்த இந்து சிறுகாப்பியம், சஞ்சீவி பர்வதத்தின் சாரலலில் இயற்கை, காதல்,வீரம், பெண்ணியம், சாதிப்பிரிவுகள், மதத்தின் பெயரால் வளர்க்கப்படும் மூடப்பழக்க வழக்கங்கள், இக்காப்பியத்துள் சிறப்புற செயல்பட்டிருந்தால் காதல் இன்பம் மட்டுமே இங்கு எடுத்தாயந்து அறியப்பட்டுள்ளது. சஞ்சீவி பர்வதத்தின் சாரல் எங்ஙனம் இதனை நுகர்வோருக்கு உடல் பிணிபோக்கி நலம் தருமோ காதலும் இதனை முழுமையாய் நுகர்வோரின் இன்பவாழ்விற்கு ஊற்றாய் அமையும் என்னும் மறைபொருளைப் பாரதிதாசன் தன் படைப்பின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார்.

**துணைநூற்பட்டியல்**
தண்டியலங்காரம் மூலமும் உரையும்
சுபாஷ் சந்திர போஸ்
உரை ஆசிரியர்
தமிழ் களஞ்சியம்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
முனைவர் கே .இரா கமலா முருகன்
தொகுப்பாசிரியர்
சாரதா பதிப்பகம்
திருக்குறள் வாழ்வியல் உரை
ரா .இளங்குமரனார்
வள்ளலார் பதிப்பகம்